Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889)
ஆவணி 28 ஆரம்பமான

வெள்ளி தோறும் வெளிவருவது
தனிப்பிரதி: சதம் 1[illegible]

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுஅ] ஸ்தாபனம்:- துன்முகி௵ ஆவணி ௴ ௨௰ வெள்ளிக்கிழமை (24 AUGUST. 1956) [இல-உ[illegible]

● வினோபாவேயின் விளக்கம்:
○ விடுதலைப் போராட்டத்தில் வேண்டப்படுவன
○ அடிமை எண்ணத்தை அடியோடு அகற்றுதல்
○ ஒற்றுமையை உள்ளன்பினால் உண்டாக்குதல்
○ சகல துறைகளிலும் சமத்துவம் காட்டுதல்
● அச்சம் அகற்றுதல்

# பிறருக்கு அடிமைகளாகோம் பிறரை அடிமைப்படுத்தமாட்டோம்

---:o:---

## நாட்டின் பெருமைக்கு உள்ளப் பெருமையே நற்சான்று

பாண்டிச்சேரியில் விநோபாபாவே அவர்கள் பேசும்போது "சுதந்திரத்தில் அன்புளன்பது நமது தனிப்பட்ட விடுதலையில் இல்லையென்றும், நாம் அடிமைப்படுத்தி வைத்திருப்பவர்களை விடுதலை செய்வதிலே தான் அது இருக்கிறதென்றும் நேற்று கூறினேன். நாம்மட்டும் பிறரது அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவதென்பது எங்கள் சுகத்தை மாத்திரம் விரும்புகிறோம் என்று அர்த்தமாகிவிடும். சுகத்தை விரும்புபவர்கள்கூட சுதந்திரப் போராட்டத்தில் இறங்கித் தியாகம் செய்யக்கூடும். அத்தகையஎண்ணம் உடையவர்கள் சுதந்திரத்திற்குப் பின்னால் சுகத்திலேயேமூழ்கி அதனை அதிகமாக்கி, பிறரை அடிமைகளாக்க ஆசை கொள்கிறார்கள். உண்மையான சுதந்திர விருப்பமுளராயிருந்தால் யாரை அமுக்கி வைத்திருக்கிறோமோ அவர்களை முதலில் விடுதலை செய்ய வேண்டும். பாரத நாட்டில் சுதந்திரத்திற்கு இருக்கின்ற மதிப்பைபோல் மற்றவைகளுகு இருப்பதில்லை.

பாரதநாட்டில் ஒரு குறிப்பிட்ட பழக்க வழக்கங்கள் தான் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. இறைவனை எந்த வழியில் வணங்க வேண்டுமானாலும் வணங்கலாம் எந்தத் தத்துவ ஞானத்தை வேண்டுமானாலும் கடைப்பிடிக்கலாம். தங்களுக்கு எந்தப் புத்தகங்கள் பிடிக்குமோ அந்தப் புத்தகங்களைப் படிக்கலாம். இதனைத்தான் பாரதீய கலாச்சாரம்என்று சொல்லுகிறோம். இரு சகோதரர்களின் பாவனையைப்போல் மற்ற மத சகோதரர்களின் பாவனையும் பிரபாவமும் இருக்கின்றது. நம்முடைய இல்லங்களிற்கூட ஒரேமாதிரியான நூல்இருப்பதில்லை, சிலரிடம் குறள், சிலரிடம் திருவாசகம், சிலரிடம் திருவாய்மொழி, சிலரிடம் தாயுமானவர் பாடல், சிலரிடம் கீதை இருக்கின்றது. எந்த நூல்களால் தங்களுக்குத் திருப்தி என்று எண்ணுகிறார்களோ அந்தநூற்களைப் படிக்கிறார்கள். இந்தக் கருத்துக்களின் உதார குணம் பண்டைக் காலத்திலிருந்தே இருந்துவருகிறது. ஆதலால் பாரத நாட்டிற்கு எல்லா நாடுகளிலிருந்தும் வந்து வசிக்கிறார்கள். கவிஞர் இரவீந்திரர்கூட பாரத நாட்டைப்பற்றிக் கூறுகையில் 'மனிதத் தன்மையின் சமுத்திரமாக விளங்குகிறது பாரதம்" என்று கூறுகிறார். சில நாடுகளில் குரான் மட்டும்தான் இருக்க முடியும். ஆனால் பாரத நாட்டில் அன்போடு உற்சாகம் கிடைக்கின்றது என்ற நம்பிக்கையில் பைபிள் படிக்கின்ற எத்தனையோ இந்து சகோதரர்களைக்கூடப் பார்க்கிறோம். இந்த உதார குணம்தான் சுதந்திரத்தின் அடிப்படை என்று கூறலாம். ஆகையால் உண்மையான சுதந்திர அன்பை ஏற்படுத்த வேண்டும்.

பாரதநாட்டினுடைய 5000 ஆண்டு சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்போமானால் மிகப் பெருமை வாய்ந்த காலத்திற்கூட பாரதம் வெளிநாட்டின்மீது படையெடுத்ததில்லை என்பது தெரியவரும். சிங்களம், சீனம், திபெத், ஜாவா, உருசியா, சின்னசியா போன்ற நாடுகளுக்குப் புத்த மதத்தின் புனிதக் கருத்துக்களைப் பரப்பும் புத்த பிக்குகள் தான் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தார்மீகப் பிரசாரத்தோடு ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர்களல்ல. அன்பையும் அறிவையும் அறமார்க்கத்தினையும் வெளிநாட்டுச் சகோதரர்களுக்கு எடுத்துக் கூறவே சென்றார்கள். ஆதலாலேதான் வெளிநாட்டினருக்குப் பாரதநாட்டின் மீது நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தியப் பெரியார்களின் சொற்களையும் சீனப் பெரியார்களின் சொற்களையும் தொகுத்து நூலாக்கம் செய்துள்ள இலின்-யூ-டாங் கூட மதுவருந்துவோன் கள்ளில் மயங்கியிருப்பதைப்போல இந்திய மக்கள் கடவுளிடம் ஊறிப் போயிருக்கிறார்கள் என்று கூறுகிறார். நம்முடைய சுதந்திரம் உண்மையான சுதந்திரம் ஆகவேண்டுமானால்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# முப்பாலின் சிறப்பு

## பாண்டியன் அவையிற் கபிலரின் பாராட்டு

--0-0--

**திரு. ம. மருதலிங்கம்**
சங்கானை

அன்று பாண்டியன் அவையில் பல நல்லிசைப் புலவர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களுள் தலைசிறந்தவர் திருவள்ளுவர். அன்று பாண்டியன் அவையில் அமர்ந்திருந்த புலவர்கள் மிக்க திறமையுடையவர்களென்பதற்கு பாண்டியனது செங்கோலே சான்றுரைக்கும். உக்கிரப்பெருவழுதியார், கபிலர் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றமே குற்றம் என்று அன்றுரைத்த நக்கீரர், வள்ளுவர், பரணர், கல்லாடர், மாமூலர், சீத்தலைச் சாத்தனார், தாமோதரனார், அரசில்கிழார், நாகன்தேவனார், பொன்முடியார், நல்லந்துவனார், மாங்குடி மருதனார், மோசிகீரனார், பெருந்தேவனார், மாணி பூதனார் இன்னபல புலவர் வரிசையில் ஐம்பத்துமூவர் அமர்ந்திருந்தார்கள். மன்னன் பாண்டியன் அவையில் இப்புலவர்கள் எல்லோரும் வள்ளுவரது திருக்குறளை நன்கு கற்று இனி உலகில் வேறு நூல் வேண்டியதில்லை என்ற நிறைந்த உளப்பாட்டுடன் மகிழ்வுற்றிருந்தனர். "நெடுமாறன் பாண்டியன் அவையில் வீற்றிருந்தான். எப்பொருள்பற்றி அவையில் ஆராய்தல் வேண்டும் என்று முன் நிகழ்ச்சிநிரல் கொடுக்கப்படவில்லையாதலால் புலவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கினர். பாண்டியன் புலவர்களை நோக்கினன்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அரசியல் அலை

# அரசகருமமொழிச்சட்டம் 'உருக்கொள்ளுகின்ற'தா?

---o---

## காரியாலயங்கள் ஒன்றுக்கொன்று கடிதப் போக்குவரத்து சிங்களத்திற் செய்யவேண்டுமாம்

அது சும்மா இயற்றப்பட்ட சட்டம், அதில் ஒரு பாதகமுமில்லை, அப்படியிருந்தாலும் இப்பொழுது அது நடைமுறையில் வரமாட்டாது என்றெல்லாம் தமிழ் பேசும் மக்களுக்குச் 'சாந்தி' 'சாந்தி' எனப் பராக்குக்காட்டிய பிரதமர் புரட்டாசி மாசம் பதினைந்தாம் நாள் முதலாகக் குறிக்கப்பட்ட அரசாங்க அலுவலகங்கள் ஒன்றோடொன்று சிங்களத்திற் கடிதப் போக்குவரத்து செய்தல் வேண்டும் என்று திட்டமிட்டிருக்கின்றாராம்.

ஆனால் ஒரு ஆறுதல் அளித்திருக்கின்றாராம் பிரதமர். பொது மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே எந்த மொழி பொதுசனத்தாற் கடிதப் போக்கு வரத்திற்கையாளப் படுகின்றதோ அந்த மொழியிலேயே மறுமொழியிருக்குமாம்! இந்தப்பெரிய வரத்தைத் தரப் பிரதமர் வேண்டியதில்லையே. அரசாங்கத்துடன் பொதுசனம் தாய்மொழியிலேயே கடிதப் போக்கு வரத்து நடத்துவதை யாரும் தடுக்கமுடியாது. ஆகவே அக்கடிதங்களுக்கு மறுமொழி அந்தந்த மொழிகளிலேயே இருக்கவேண்டுமென்றது சாதாரண உரிமை ஆகும்.

தோளில் ஏறிவிட்டாற் செவியிற் கைவைக்கலாம் என்ற விதமாகச் சிங்கள மொழியிற் கடிதப்போக்கு வரத்தை அரசாங்க அலுவல்களிற் புகுத்தி விட்டு ஆங்கு அந்த மொழியிலே கருமம் ஆற்ற முடியாதவர்களைப் புறக்கணிப்பதற்கு வழி தேடப்படுகின்றதை ஒருவரும் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்று நினைக்கின்றார்போலும் திரு. பண்டாரநாயக.

**தோலிருக்கச் சுளை களைதல்**

அரச ஆதிக்கக் கட்சியில் இருந்து விலகிய திரு. இராசரத்தின வெளிப்படையாகக்கூறி விரோதத்தைக் காட்டினாலும் பிரதமரும் அவரது உதவியாளர்களும் உள்விழுந்து காரியம் பார்ப்பது பெரும் பொல்லாங்காய் விளையும் என்பதைத் தமிழ் பேசும் மக்கள் அறிதல் வேண்டும். இணக்கமாய்ப் பேசி இலேசாக அலுவல் முடித்து விடலாம் என்று முதல் அமைச்சர் திட்டமிட்டிருக்கிறார். பொதுக் கூட்டத்தைப் பற்றிக் கவலையில்லை; ஊர்வலத்தைப் பற்றி ஒருபொழுதும் தயங்கமாட்டார்; ஆனால் மெல்ல மெல்லத் தோலிருக்கச் சுளை வாங்கும் நடைமுறைகளைக் கொண்டுவந்து தமிழ்மொழியைத் தாழ்த்தித் தள்ளிவிடுவார்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஸு ஆவணிமீ
கூ உ வெள்ளிக்கிழமை

## ஆதிக்கக் கட்சிக்கு அறிவு வராதா?

தமிழ் பேசும் மக்களின் உள்ளத்தில் உணர்ச்சி ஊற்றாய் உற்பத்திசெய்து விட்டதென்பதை தனிச் சிங்கள ஆதிக்கக் கட்சியும் அதன் ஆதரவாளர்களும் இன்னும் அறியாமலிருக்கின்றார்களா? சிங்களமே முழுத்தின் அரச மொழி என்ற ஒரு சட்டத்தை ஆட்சிபலத்தாற் பாராளுமன்றத்திற் கொணர்ந்த பண்டாரநாயக அரசாங்கம் அதற்குப் பின் பல வேறிடங்களிற் சிறுபான்மையினருக்கு ஆறுதல் கூறுமுகத்தான் தமிழ் மொழியின் உரிமை பாதுகாக்கப்படும் என்று வெளியிட்ட வெறும் கூற்றுக்களைத் தமிழ்பேசும் மக்கள் நம்பிவிடுவார்கள் என்று மனப்பால் குடித்து வந்த சிங்களத் தலைவர்களுக்கு இன்னும் அறிவு வரவில்லைப்போலும்.

திருக்கோணமலையில் மாநாடு கூட்டிய சமட்டிக் கட்சியினர் திட்டவட்டமாக எதிர்கால முயற்சிகளை எடுத்துக் காட்டியதுமன்றி அரசாங்கத்துக்கும் எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள். கூட்டு ஆட்சியா? தமிழ்நாடா என்ற அரசியல் அமைப்பு நுட்பத்தைப்பற்றி நாம் ஆராய வேண்டியதில்லை. எல்லாக் கட்சியினர்களும் தமிழ்பேசும் மக்கள் வாழையடி வாழையாகத் தொன்று தொட்டு வாழ்ந்துவளர்ந்து வந்த இடங்கள் தமிழ் நாடாக வேண்டும் என்று தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்ற உண்மையை அடிப்படையில் வைத்து நோக்கின் அரசியல் அமைப்பைப் பற்றியாவது வேற்றுமை இல்லை என்றே கூறலாம்.

தமிழ்நாட்டை ஆக்கிப் பின் கூட்டாட்சியை அமைப்பது முறையென்பர் ஒருசாரார். கூட்டாட்சியை நிறுவி அவ்வழியாகத் தமிழ் நாட்டை ஆக்குவது நெறியென்கின்றனர் மற்றையோர். ஆனல் உண்மையில் ஒரு உணர்ச்சி ஒருநோக்கம் ஒருகுரல் தமிழ்பேசும் மக்கள் உள்ளக் குகையிலிருந்து எழுவதை யாவரும் அறிவர். சிங்களமே அரசமொழி என்ற சட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் ஒருபொழுதும் ஏற்கமாட்டார்கள். பாரம்பரியமாகவுள்ள தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற இடங்களிலே சிங்களம் பேசும் மக்களைக் குடியேற்றும் கொள்கையை எதிர்க்காது விடமாட்டார்கள். இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் பிறப்புரிமையாய் இலங்கைக் குடிமை பெறுவதற்கு அரசாங்கம் தடை விதிப்பதை ஆட்சேபியாது விடமாட்டார்கள். இந்த முடிபுகள் எல்லாக் கட்சிகளுக்கும் எல்லாத் தலைவர்களுக்கும் ஒப்ப முடிந்தன.

எனவே சமட்டிக் கட்சியார் திருக்கோணமலை மாநாட்டிற் செய்த முடிபுகள் பொருத்தமானவையே. இந்த முடிபுகளுக்கு அரசாங்கம் என்ன மறுமொழி கொடுப்பதற்கு எண்ணுகின்றது என்பதை மக்கள் எதிர் பார்த்த வண்ணமாய் இருக்கின்றனர். ஆட்பலத்தால், ஆதிக்கத்தால், அட்டூழியத்தால் ஒரு இனத்தை ஒரு மொழியை ஒதுக்கி ஒழித்து விடுவது முடியும் என்று பண்டாரநாயக அரசாங்கம் எண்ணுகின்றதானல் இக்நாட்டில் இரணிய ஆட்சி நடக்கின்றது என்றே சொல்லுதல் வேண்டும். அசுர ஆதிக்கம் எக்காலத்திலும் நிலைபெற்றதில்லையே!

# திருக்கோணமலை மாநாட்டின் தீர்மானம்

## சமட்டி ஆட்சி வருக்கக் காலஎல்லை

### ஒருமொழிச் சட்டத்திற்கு எதிர்ப்பு

பலவேறிடங்களி லிருந்து வந்த சமட்டிக்கட்சி ஆதரவாளர்களின் மாநாடு திருக்கோணமலையில் முறைப்படி நடந்தது.

கொடியேற்று விழாவின்பின் திரு. என். ஆர். இராசவரோதயம் அவர்கள் வரவேற்புரை கூறினர். திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் நான்காவது மாநாட்டுத் தலைமைஉரையை நிகழ்த்தும்போது ஊர்வலத்தின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் விளக்கிப் பின் தனிச்சிங்களச் சட்டத்தால் விளைந்த நெருக்கடியை எடுத்து விரித்துரைத்து தமிழ் பேசும் மக்கள் சமட்டி ஆட்சி முறையிலேதான் விடுதலை அடைதல் கூடுமென்று கூறினர். தீண்டாமை ஒழிப்பின் இன்றியமையாமையும் எடுத்து வற்புறுத்தினர்.

அரசாங்கம் ஓராண்டுக்குள் சமட்சி ஆட்சி வகுத்தல்வேண்டுமென்ற பிரேரணையைத் தலைவர் சபைக்குச் சமர்ப்பித்தனர். அதை ஆதரித்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் பேசினர்.

பிரேரணை பின்வருமாறு:

1 இலங்கை அரசாங்கம் அடுத்தடுத்து எடுத்து வரும் நடவடிக்கைகள், ஒற்றையாட்சி முறை இந்நாட்டில் சனநாயகக் கொள்கைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டதென்பதையும் தமிழ்ப்பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி ஒழிக்கவே இந்த ஆட்சிமுறை உதவிவருகின்ற தென்பதையும் சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படுத்திவிட்டது. இந்த நிலைமையில் தற்போதைய ஒற்றையாட்சி முறையை ஒழித்துச் சமஷ்டிக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புதிய சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படவேண்டுமென்றும் தமிழ்ப்பேசும் மக்கள் பெரும்பான்மையோர்களாக வசிக்கும் பகுதிகளெல்லாம் தமிழ் இராச்சியமாக சமஷ்டி அரசியலுக்குள் நிறுவப்பட வேண்டுமென்றும் இந்த பாஷாவாரி இராச்சியங்களுக்கு தேசஒற்றுமைக்கும் வெளிநாட்டுப் பாதுகாப்புக்கும் உகந்த வகையில் விரிவான சுயாட்சி அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்றும் இம்மகாநாடு கோருகின்றது.

2 தமிழ்மொழி அதன் பழைய அஸ்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு நாடு முழுவதிலும் சிங்களத்துடன் சரிநிகர் சமானமாக தமிழும் இராசாங்க மொழியாக்கப்பட வேண்டும்.

3 தற்போதைய பிரசாவுரிமைச் சட்டம் உடன் கைவிடப்பட்டு இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்களுக்கெல்லாம் பிரசாவுரிமை கிடைக்கும் வகையில் சுலபமான வாசகால பரீட்சையின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்படவேண்டும.

4. தமிழ்ப்பகுதிகளில்சிங்களவர்களைக் குடியேற்றுவது உடன் நிறுத்தப்படவேண்டும்.

# இலங்கையில் மொழிஉரிமை

## சென்னை மாநகரில் பேருரைகள்

சென்னை 'ஜோர்ஜ் டவுன்' கத்தோலிகக நிலையத்தில் 'இலங்கையில் மொழிஉரிமை' என்ற பொருள்பற்றிப் பேசப்பெற்ற கூட்டத்துக்குத் தலைமை வகித்த பேராசிரியர் திரு. இரத்தினசாமி அவர்கள் பேசும்போது 'இன்றைய சிறுபான்மையினர் நாளை பெரும்பான்மையினராக வரககூடுமானல் மட்டுமே பெரும்பான்மையினர் ஆட்சி என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளலாம். மொழி சமய சிறுபான்மையினர் நிரந்தரமாக சிறுபான்மையினராகவே இருப்பார்கள். இப்படிப்பட்ட ஒருநிலையில் பெரும்பான்மையினர் ஆட்சியில் நம்பிக்கை வைப்பது பெரும்பான்மையினர் ஏதேச்சாதிகாரத்துக்கு அனுமதி அளிப்பதாகும்.

தேசிய மொழிக் கொள்கையில் அதிக முன்னேற்றமடைந்துள்ள கனடா. சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளின் உதாரணங்களை பிரதமர் திரு. பண்டாரநாயக பின்பற்றுவாரென நான் நம்புகிறேன் என்று கூறினர்.

வண சுவாமி தனிநாயகம் அவர்கள் பேசும்போது இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு சிங்களவர்களுடன் எதுவிதமான விரோதமும் கிடையாது. 'சிங்களம் மட்டும் சட்டத்தினல் ஏற்பட்டுள்ள அநீதியை சிங்களவர்களில் அநேகர் உணருகின்றனர்.

தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களின் அபிப்பிராயத்தைக் கிளறிவிடும் ஒருமொழிக் கொள்கையை வகுத்துக் கொண்டு தங்கள் ஆட்சியை ஆளும் கட்சி ஸ்திரமாக்கிக்கொள்ள முயல்கிறது. இலங்கையின் மொழி, கல்வி, கொள்கைகள், வகுப்புவாதம் பாராட்டும் அடிப்படையிலேயே அமுல் நடத்தப்பட விருக்கின்றது.

'சிங்களம் மட்டும்' கொள்கைக்கு இலங்கையில் தெரிவிக்கப்படும் எதிர்ப்பு அந்நிய நாடுகளின் ஆதரவுடன் நடைபெறுவதாகக் கூறுவது உண்மையல்ல. உண்மையான சனநாயகம் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ மொழிக்கோ அல்லது சமயத்துக்கோ பிரத்தியேகமான சலுகைகள் எதுவும் கொடுக்கக்கூடாது என்று என்று கூறினர்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 26—8—56 —— 1—9—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

குடும்ப அலுவல்களிற் சிக்கல் உண்டாகும். புது முயற்சிகள் கவனமாகக் கையாளப்பட வேண்டும். மன அமைதி கிடைக்காது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

அநுகூலம் அடைவதற்குக் கடினமாக வேலைசெய்தல் வேண்டும். சுற்றத்தவர்கள் சிறு தொத்தரவு கொடுப்பார்கள். ஆனல் நண்பர்கள் நல்லாதரவா யிருப்பார்கள். பண இலாபமும் கிடைக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

கிலங்களால் இலாபம் கிடைக்கும் வில்லங்கங்களிலிருந்து நண்பர்கள் காப்பாற்றுவார்கள். தந்தை வழிச் சுற்றத்தவர்களால் தொந்தரவு வரக்கூடும். மேல் ஆட்களுடன் வாக்குவாதத்தை விலத்தி நடக்கவும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

பண இலாபம் கிடைக்கும். இடையூறுகள் பலவற்றை நீக்கக் கூடியதாயிருக்கும். சமூகத்துறையில் நயமும் எதிர் பாலாரின் கருணையும் காணப்படும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

உத்தியோக முறையிலே தொந்தரவு ஏற்படக்கூடும் வரவுக்குத் தக்கதாய் செலவை மட்டுப்படுத்த முடியாது, சுற்றத்தவர்களுடன் வாக்குவாதத்திற் கிடமுண்டு

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்பச் சூழலில் நன்மைக்குப் பங்கமுண்டு ஞாயிறு திங்கள் செவ்வாய் இடையூறுகளை நீக்குதல் இலகுவாகமாட்டாது. தந்தை வழிச் சுற்றத்தவர்கள் தொந்தரவு கொடுப்பர். செலவு கூடிக் கொண்டுபோகும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

முக்கியமான அலுவல்களில் முடிவுக்கு வருதல் முடியாது. உணர்ச்சியால் உந்தப்பட்டு நட்டமும் அடையவேண்டிவரும். உத்தியோகத் துறையில் உகந்த வாரம். செவ்வாய் புதன் வியாழன் காலை கவனமாய்க் கழிக்கப்பட வேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தொந்தரவுக்குரிய வாரம். மனம் மிகவும் தளப்பம் அடையும். வேலைக் கஷ்டமும் கூடும். இடையூறுகளை நீக்குவதும் சுலபமாயிராது. வார இறுதி மூன்று நாட்களும்அல்லலைக் கொடுக்கும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

சொந்த அலுவல்களிலே நன்மையான முன்னேற்றம் உண்டாகும். குடும்ப நிலைமையும் சீராக வேண்டும், வாரம் முடியுமுன் புது முயற்சிகளில் நற்பலன் கொடுக்கும்

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

குடும்ப அலுவல்கள் திருப்திகரமா யிருக்கமாட்டா. அநுகூலமடைவதற்கு அரும்பாடுபடவேண்டும். தேகநிலையில்சிர்கேடும்பணக் கஷ்டமும் காணப்படும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

பண நிலைக்கு நல்லதானலும் இவ்வாரத்திற் குடும்பத் தொல்லைகள் காணப்படும். பிணக்குகளைத் தேடிப் பின்செல்லவும் விருப்பம் எழும். வாரமுடிவில் நெருக்கடி சிறிது குறையும். நண்பர்கள் தொந்தரவி லிருந்து நீக்கி வைப்பார்கள்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

நிலையற்ற வாரம். மன அமைதியே கிடையாது. தேகநிலை வாய்ப்பாயிராது. வார இறுதியில் நல்ல செய்தி கிட்டும்.

# சுதந்திரம் எது?

## நாம் செய்யவேண்டிய கடமை

தத்தம் மனம்போனபடி வாழ்வதும், வாழ இடமளிப்பதும்தான் சுதந்திரம் என்பது எனச் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலுந் தவறு. சீரிய வழிகளில் தத்தம் நிலைக்கேற்பவும், வசதிக்கேற்பவும் காலத்திற்கேற்பவும், உடல், பொருள், ஆவி மூன்றினாலும் இழுக்கின்றிச் சேவை செய்து வாழ்வதற்கு இடமளிப்பது உண்மைச் சுதந்திரமாகும். இத்தகையசுதந்திரத்தால் இன்னல்களும், இழிவுகளும் ஒருபோதும் உண்டாகமாட்டாது. இத்தகைய சுதந்திரப் போக்கு ஒவ்வொரு மக்கள் இதயத்திலும் குடிகொண்டால் அதுவே மக்களின் ஒற்றுமை வாழ்விற்கு ஏற்றதாகும். இன்று உண்மைக் கண் கொண்டு எங்கு நோக்கினும் பரோபகார வாழ்க்கைக்கு ஏற்ற இடம், பொருள், ஏவல்களிருந்தும், சுயநலமே தங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ற கொள்கை யுடையோரையே பெரும்பாலும் காணலாம். இச் சுயநல நோக்குடையோர் சமுகத்திலிருக்கும்வரையும் சமுகம் முன்னேறவோ பிறர்நலம் பேணும் உயர்நலவாழ்க்கை வாழவோ முடியாதென்பது உறுதி.

உண்மைச் சுதந்திரத்தை மக்கட்கு உரியபோது அளிப்பதற்கு உரிய வழிகளை ஆக்கிக்கொடுக்க உணர்ச்சி கொள்கின்றது. கடவுளாலே இயற்கையாக அளிக்கப்பட்ட சில சுதந்திரங்களையும் தகுந்த வழிகளில் பாவிக்கவிடாமல் சிலர்

செல்வி த. மாலோகமணி

அடக்குவது — அடக்கக் கங்கணங்கட்டுவது அவர்கள் களங்கமுள்ள உள்ளத்தோரென்பதையும் பண்பற்ற பக்தர்களென்பதையும் விளக்கமாகக் காட்டுகின்றது.

நல்லவர்களும் உணர்ச்சி இதயம் படைத்தவர்களும் பலர் இருந்தால் தாராள மனப்பான்மையும் விட்டுக்கொடுக்குந் தன்மையுமுள்ளதாகச் சமுகம் விளங்கும். ஆதலால் ஒவ்வொருவரும் அவரவர்கட்குரிய காலங்களில் அவரவர்கட்கு ஏற்றவாறு சுதந்திரஉரிமைகளையளித்து ஒற்றுமையாகவும், சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ வையத்துள் வழி வகுக்க வேண்டும். இதுவே உண்மைச் சுதந்திர வாழ்க்கையும் முற்போக்குமாகும்.

---

ஈழத் திருத்தலங்கள்

# முளங்காவில் விநாயகர் ஆலயம்

## பண்டைப் பெருமையும் இன்றைய நிலையும்

### சைவ நன்மக்களும் சபைகளும் திருப்பணிக்குதவுக

பண்டைக்காலந் தொட்டு இன்று வரையும் வடதென் நாடுகளில் விநாயக வணக்கம் பரவி இருக்கிறது. இக் காலத்துப் புரட்சிக்காரர் சிலர் விநாயக வணக்கம் இடையிட்டு வந்ததென்பர். இது பொருத்தமாகாத கூற்றாகும். தென்னாட்டில் புராதீனமாக அமைந்தவாதாபி விநாயகர் போன்ற ஆலயங்கள் இலங்கையின் வடபாகத்திலும் உண்டு. இவ்வித ஆலயங்கள் ஒருகால் வடபாகமாகிய மாதோட்டப்பகுதியில் தமிழ் அரசர்கள் காலத்தில் மலிந்திருந்தன.

பின் பறங்கியர் ஆட்சிக் காலத்தில் இடித்தழிக்கப்பட்டன. இப்போது மீண்டும் சில ஆலயங்கள் தோன்றித் திருவருட்காட்சி யளிக்கின்றன. உதாரணமாகத் திருக்கேதீஸ்வரக் கோயில், வேட்டையமுறிப்பு, இராசேஸ்வரியம்மாள் கோயில் என்பன குறிப்பிடலாம். இவைபோன்றது முளங்காவில் என்பது. இது பல்லவராயன்கட்டைச் சார்ந்த குறிச்சியாகும். பூநரி மன்னார் வீதியில் 21 மைல்தூரத்தில் உள்ளது. இது பொன்னவெளி உடையார் பகுதிக்குரியது. இங்கு ஒரு விநாயகர் ஆலயம் உண்டு. அது தற்போது தெருவோரத்தில் மரங்களடர்ந்த காடுகளுக்கிடையிலுள்ளது. மிகப் பூர்வீகமானது. யாழ்ப்பாணக் கிராமங்களிலிருந்து மன்னார் மாதோட்டம் நட

செ. கோவிந்தசாமி அவர்கள்

ந்து செல்பவர்கள் இவ்விநாயகரை வழிபாடு செய்தே புறப்படுவர். இவ் விநாயகரைப்பற்றி கர்ணபரம்பரையான கதைகளுண்டு. வட இந்தியாவிலிருந்து திருக்கேதீச்சரத்தைத்தரிசிக்க வந்த மாலிபவான் பிருகுமுனிவர் பருப்பத முனிவர் முதலானோருடன் கூடிவந்த சித்பவானந்த முனிவரே இவ் விநாயகரைத் தாபித்து வணங்கிக் கதிர்காமம்சென்றார் என்றும் அவர் செல்லுமிடந்தோறும் விநாயகருக்குக் கல்வைத்துப் பூசித்தாரென்றும் ஐதிகக் கதைகள் மூலம் அறியக் கிடக்கின்றது. இதனால் இவ்விநாயகரை சித்பவானந்த விநாயகரென்றும் சித்திவிநாயகரென்றும் முன்னுள்ளோர் கூறி வந்ததாகவும் ஐதிகம் கூறுகின்றது

இன்னும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலபெருமானின் தமையனாரும் அரசாங்க உத்தியோகம் வகித்தவரும் தமிழிற் புலமை படைத்தவருமாகிய ஸ்ரீ பரமானந்த முனிவர் தமக்கிருந்த நோய் காரணமாக கதிர்காமத்திற்கு இவ்வழியாற் சென்றகாலை இவ்விநாயகருக்குப் பக்தி பூர்வமாகச் சில செ[...]யுட்கள் பாடி நோய் நீங்க[...] பெற்றதாகக் கதிரை யா[...]திரை விளக்கம் எனும் நூ[...] கூறுகின்றதாக முதியோ[...] கூறுகின்றனர். இந்நூ[...] வசாவிளான் சாரதாபீ[...] அச்சியந்திரசாலையில் பதி[...]பித்ததாகவும் அறியக்கிட[...]கின்றது.

இங்கு ஒரு நல்ல தண்[...]ணீர்க்கிணறும் இருக்கின்[...]றது. இக்கிணற்றை [...] தோண்டியவர்கள் தண்[...]ணீர் காணமல் விநாயகனை நினைத்து மனவருத்தப்பட்டார்கள். அப்பொழுது [...] நினையாப் பிரகாரமாய் ஒரு இடியேறு விழுந்து கிண[...]றுள் இருந்த பெருங் கற்[...]பாறை உடைந்து தண்ணீர் வந்ததாகவும் கூறுவர். இக் கிணற்றுக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு பெருங் குளம் இருக்கிறது. அது வற்றாத நீரையுடையது. இக்குளத்திலிருந்து வயலுக்கு நீர்ப் பாய்ச்சுகிறார்கள். இப் பகுதி மக்கள், குடியேறுவதற்கு உவந்த நிலமாகும். இத்தகைய இடத்தில் சங்கானையைச் சார்ந்த திரு. சிவப்பிரகாச சாமியார் என்னும் அடியவர் பூசனை புரிந்து வருகிறார். இவ்வடியவர் முயற்சியால் காடு அழிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் இக்கோயிலுக்கு நிலம் கொடுத்திருக்கிறது. இப்போது பொன்னவெளி உடையரார் திரு கு. அருளம்பலம் காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை மாகாண அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா ஆகியோருடன் இன்னும் பல அன்பர்களின் முயற்சியால் ஒருமடம் அத்திவாரம் இடப்பட்டு வேலை ஆரம்பிக்கப்படுகிறது. இம்மட வேலை கூடிய விரைவில் நிறைவேற்றப்படும் என்க. சைவஅன்பர்களும் சைவச் சபைகளும் ஒன்றுசேர்ந்து இத் திருப்பணிக்கு உதவி புரிய எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

---

# பழுதுபட்ட பொருளாதாரம்

## திருத்துதற்குப் பனம் பொருளுற்பத்தி

### பனை மகோற்சவ வேண்டுகோள்

"கிளிநொச்சி வவுனியா பகுதிகளில் வயல் ஓரங்களிலும் வேலி எல்லை வெற்றிடங்களிலும் பனம்விதைகளை நாட்டவேண்டும். இதற்காக இந்தவருடம் சுமார் ஒரு இலட்சம் பனம் விதைகளை அப்பகுதிக்கு அனுப்ப தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இத் திட்டம் சுமார் 10, 15 வருடங்கள் தொடர்ந்து இருக்கவேண்டும்" என அகிலஇலங்கைக் காந்திய சேவாசங்கப் பொதுக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் உணவு உற்பத்தி அதிபருக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கைப் பனை மகோற்சவத்தை இந்த வருடம் மிகவும் சிறப்பாகவும் விரிவாகவும் கொண்டாட வேண்டும் எனவும் வருகிற புரட்டாதி மாதம் 1ம் திகதி தொடக்கம் ஐப்பசி மாதம் 2ம் திகதிவரையும் சுமார் ஒருமாத காலம் இப் பனை மகோற்சவம் கொண்டாட வேண்டும் எனவும் பனைகளை உண்டாக்கி அபிவிருத்திசெய்வது ஒரு உணவு உற்பத்தி இயக்கம் என்றும் திரு. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

"1949ம் ஆண்டுக்குப் பிறகு சுமார் 70,000 பனைகளுக்கு மேல் தறித்து அழிக்கப்பட்டுள்ளன. இவ்விதமாக நாட்டில் இருக்கும் பனைகள் அழிக்கப்பட்டால் எதிர்காலத்தில் நம்நாட்டில் பனைகள் இல்லாமல் அழிந்துவிடும். வட பகுதியின் தேசிய விருட்சமாக வருமானத்தைத் தரக்கூடிய தாகப் பனைகள்தான் உண்டு ஆகையால் வருங்கால சந்ததிகளின் நலனை உத்தேசித்து பனம்பயிரிடும் இயக்கத்தை ஒரு தேசிய இயக்கமாகக் கவனித்து வேலை செய்ய வேண்டும்.

பனைகளைக் கண்டபடி தறிக்கக்கூடாதென இருந்த அரசாங்கக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதனல் வியாபாரிகள் ஏராளமான பனைகளைத் தறித்து அழிக்கின்றார்கள். குறித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தாமல் இறுக்கமாக வைத்திருந்தால் வீடுகட்டுவோர் ஏனைய மரங்களை உபயோகப்படுத்தமுயற்சிப்பார்கள்.

பொருளாதார நிலை எதிர்காலத்தில் மிகவும் மோசநிலையை அடையஇருக்கின்றது. இதை ஓரளவு பனையின் மூலம் ஈடுசெய்யலாம். வாழ்க்கைக்குத் தேவையான நூற்றுக்கணக்கான பொருட்களைப் பனையில் இருந்து உற்பத்தி செய்யலாம். ஒருபனையில் இருந்து ஒரு வருடத்தில் வெல்லம் அல்லது சீனி மாத்திரம் நூறு ரூபாவுக்கு உற்பத்தி செய்யலாம். தென் இந்தியாவில் பனை வெல்ல உற்பத்தி முறையில் பல அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. பனையின் உபயோகத்தை அபி விருத்தி செய்வதில் பாரதநாட்டிற் பெரிய ஆராச்சி வேலைகள் நடைபெறுகின்றன எதிர்காலத்தில் பனையில் ஏறி பதனீர் சேர்த்துக் கஷ்டப்படவேண்டியதில்லை. பனம் வேரில் இருந்து பதனீர்சேர்த்து வெல்லம் தயாரிக்கும் புரட்சிகரமான முறை அங்கு ஆராயப்பட்டு ஓரளவு பூர்த்தியடைந்து வருகின்றது. இந்த ஆராச்சி எங்கள் நாட்டுக்கும் பெரிய பலனைத் தரும்.

பனம் பாளையில் இருந்து வருடம் முழுவதும் பதனீர் பெற முடியாது. பனை வேரில் இருந்து பதனீர் சேர்க்கும் சாதனை பூரண வெற்றியளித்தால் அது இந்த நாட்டுக்கும் ஒருவரப்பிரசாதமாகும். அத்தகைய சாதனைகளையும் படிப்பனைகளையும் பாரதநாட்டில் இருந்துபெற நாம் ஏற்பாடு செய்துள்ளோம். எங்கள் நாட்டில் பனைகளை அழிப்பது எவ்வளவு நஷ்டம்? ஆகையால் எல்லோரும் இயன்ற அழவு பனைகளைப் பயிரிட முயற்சிக்க வேண்டும் எனவும் அக் கடிதத்திற் குறிப்பிட்டார்.

---

### ஆபத்தைப் பொருட்படுத்தாத நேரு

—:—

பூகம்பத்தினல் கட்சுப் பகுதியில் உண்டான நிலைமையைப் பார்வையிடும் பொருட்டு பண்டித நேரு அவர்கள் இயந்திர வண்டியொன்றிற்சென்றார். செல்லும்போது அது கவிழ்ந்தமையால் அவர் வெளியில் விழுந்து முழந்தாள் தோள் முதலிய இடங்களில் காயங்கள் உண்டாயினவாம். ஆனல் அவர் பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டாராம்.

# சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்

# செய்த சேவைச் சிறப்புக்கள்

## ஞாபக சின்னம் அமைக்க வேண்டுகோள்

(சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்களின் நினைவுநாளில் சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை அவர்கள் நிகழ்த்திய உரையைத் தழுவியது.)

ஆறுமுகநாவலர் பெருமான் காலத்திற்கு முன் பறங்கியர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணக்குடாநாடு சமயத்துறையிலும் தமிழிலும் அதிக வீழ்ச்சியுற்றிருந்தது. நமது முன்னோர் செய்த தவப் பயனாய் மெய்யறிவுக்கிடமாய், விளங்கிய ஆறுமுகநாவலர் பெருமான் நாமெல்லாம் உய்ய வந்து தோன்றிச் சைவசமயத்திற்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைந் தெறிந்தார். தமது சிறந்த நூல்களாலும் உயர்ந்த இலட்சிய வாழ்வினாலும், வீரச் செய்கைகளினாலும் தமது ஸ்தாபனங்களினாலும் தூயவாழ்க்கையாலும், கேட்போரைப் பிணிக்கும் பிரசங்கத்தினாலும், சைவப் பயிருக்கு வித்திட்டார். அவரால் இடப்பட்ட வித்து முளைத்தது. யாழ்ப்பாண நாட்டில் சைவசமயத்தில் மறுமலர்ச்சி உண்டாகியது. சைவ வித்தியாசாலைகள் எழுந்தன. புராண படனங்கள் கோயில்கள் தோறும் நிகழ்ந்தன, விரதங்கள் சைவ அனுட்டானங்கள் சிறந்து விளங்கின. இத்தகைய வழியில் முளைத்த பயிருக்கு தண்ணீர் விட்டு வளர்த்தவர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள். தமது தூய வாழ்க்கையாலும், சிறந்த பக்தியினாலும், ஒப்பற்ற தியாகத்தினாலும், தாம் எழுதிய நூல்களாலும் பொருள் பொதிந்த விரிவுரைகளினாலும் சைவப் பயிரை அவர் செழித்து வளரச்செய்தார்.

உயர்ந்த சைவப் பண்பாடுடைய சைவக்குடும்பத்தில் வந்து அவதரித்தார் சிவபாதசுந்தரம் அவர்கள். ஆங்கிலமும், தமிழும், சமஸ்கிருதமும், சமயமும் பயின்று நிரம்பிய அறிவைப் பெற்ருர். அவர் வாழ்வெனும் மையல்விட்டார். போகபோக்கியங்களை உதறித் தள்ளினுர். புறநோக்கை அகறறினர். அகநோக்கை அவர் விருத்தி செய்தார். உடம்பையும், நேரத்தையும், பொருளையும் சிவப்பணிக்கென அர்ப்பணம் செய்தார். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதுதான் அப் பெரியாரின் குறிக்கோள். நமது நாட்டின் எதிர்காலச் சிறப்பு சிறுவர் கையிலிருப்பதை உணர்ந்து அவர்களைச் சைவ வாழ்க்கையில், சைவப் பண்பாட்டில் உருவாக்க வேண்டும் என்பதே அவரது வேணவா. ஆகையால் சைவப்பாடசாலைப் பிள்ளைகளுக்கென சைவபோதம் முதலாம், இரண்டாம் புத்தகங்களையும், சைவசமயசாரம், திருவருட்பயன் உரை முதலியவற்றையும் எழுதினர், எஸ். எஸ். சி. மாணவர்களுக்குச் சமய பாடத்தை ஒரு பாடமாக்குவதில் அதிகம் உழைத்தார். அதில் வெற்றியும் பெற்ருர். தாமே இறுதிவரை அப்பாடத்தின் பிரதம பரிசோதகராகவும் விளங்கினர். தமிழில் எழுதிய நூல்களில் திருவருட்பயனுரை ஒரு சிகரம் போன்று விளங்குகின்றது. அந்த உரைநூல் அவரது வேதாகம சித்தாந்த நுண்ணிய அறிவையும், தமிழ் இலக்கண இலக்கிய நூலறிவையும், பரந்த உள்ளத்தையும், பக்தித் திறத்தையும் என்றென்றும் எடுத்துக் காட்டி நிற்கும். ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள் Saiva School of Hinduism (சைவத்தின் பெருமை) Glories of Saivaism என்பன.

Saiva School of Hinduism என்னும் நூல் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் பரவியது. அநேக தத்துவ ஆசிரியர்களும் ஆன்ம விடுதலையைநாடிநிற்கும் மேலைத்தேசப் பெரியார்களிற் சிலரும் அந்நூலை வாசித்து மெச்சியிருக்கிறார்கள். ஒரு அமெரிக்க சட்டநூல் அறிஞர் பல தத்துவ சாஸ்திரங்களைப் பயின்று மனச் சாந்தி கிடையாமல் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனர் எழுதிய Saiva School of Hinduism என்ற நூலைப் படித்தபின் மனச்சாந்தி பெற்ருரென்று சிவபாதசுந்தரனுருக்கு ஒரு கடிதம் எழுதிருந்தார்.

அவர் நல்லாசிரியர். ஆசிரியர்களுக்குள் தலைசிறந்து விளங்கினர். அகநூலறிவு, தத்துவ சாஸ்திரம், கணிதம் ஆங்கிலம்முதலிய சகல பாடங்களிலும் நிரம்பிய அறிவுடையவர்.

அவரது மாணவர்கள் இப்பொழுது இலங்கையிலும், பர்மா, மலாயா முதலிய தேசங்களிலும் நல்ல பதவிகளைப் பெற்று சமய வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். அவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெரியார். நாகரிக வாழ்க்கையை வெறுத்தார். போதனையிலும் சாதனை சிறந்ததென்பதைக்கடைப் பிடித்தொழுகினர். வாய் வேதாந்தம் பேசுபவர்களைக் கண்டித்தார், கல்வி, ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அடக்கம் முதலியன ஒருங்கே அமையப்பெற்றவர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களே. ஆறுமுகநாவலருக்குப் பின் சைவசித்தாந்தத்தில் தனிச் சிறப்பு வாய்ந்த பெருமையையும் அந்தஸ்தையும், எவரது களங்கமற்ற நன்மதிப்பையும் பெற்றவர் சைவப்

தொடர்ச்சி 6-ம் பக்கம்


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20 11-46—20-11-49.


# தாய்மொழிக் கல்வி

## தமிழ் மக்கள் ஆதரவு திண்ணம்

(முற்ருெடர்)

தமிழ் மொழிமூலம் உயர்தரக்கல்வி விஞ்ஞான சாத்திரம் கற்பிப்பதற்குப்போதிய நூல்கள் தமிழில் இல்லையென்பது ஒருகுறை. "எந்தத் துறையிலும் நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமானுல் அதற்கு முன்பே அந்தத் துறையில் சிந்தனை வளர்ந்திருக்க வேண்டும். சிந்தனை வளர்ந்த பின்னர்தான் செம்மையான நூல்கள் எழமுடியும். இன்று விஞ்ஞானத் துறையில் நூல்கள் இல்லையே என்று குறைகூறுவோர் தமிழில் அந்தத்துறையில் சிந்தனை வளர்த்தவர் இல்லையென்பதை முதலில் உணர வேண்டும்...... தாய்மொழிக் கல்வி இயற்கையானதாகும். தமிழ் மண்ணில் வாழை வளமுற வளர்வதுபோல், சிறிது இடங்கொடுத்தாலும் இளைஞரின் மூளையில் தாய்மொழி

திரு. ப. இ. தேவராசா
கொழும்பு

வளர்ந்துவிடும். ...... ஆகவே, நூல்கள் எந்த மொழியில் இருப்பினும் இருக்க, கற்பித்தலும், கற்றலும், தாய் மொழியில் இருத்தல் கடமை என்ற தெளிவுதான் இன்று தமிழ் நாட்டு அறிஞர்க்கு வேண்டும்" (டாக்டர் மு. வ. கலைக்கதிர் - மலர் 7. இதழ் 6. பக்கம் 3, 6, 8)

தமிழ் வளர்ச்சியடைய வேண்டுமானுல் தமிழர் ஒவ்வொருவரும் தமிழ்நூல்களைப் படிக்க வேண்டும். தமிழில் பேசினுல் மதிப்புக் குறைந்துவிடும் என்ற எண்ணம் மனதில் இருக்கக்கூடாது. சிந்தைக்கும் செவிக்கும்இனிமையளிக்கும் சிந்தாமணியையும், இளங்கோ ஆக்கிய சிலப்பதிகாரத்தையும் கல்லினை உருக்கும் மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும், உலகமெல்லாம் வரவேற்கும் உயர்ந்த கருத்துக்கள் கொண்ட வள்ளுவர் குறளையும், காதலையும் வீரத்தையும் விளக்கும் அகப்புற இலக்கிய அமுதையும், மற்றும் சிறந்த நூல்களையும் கற்கவேண்டும். அல்லாமலும் இற்றைஞான்று வெளிவரும் 'கலைக்கதிர்' போன்ற வெளியீடுகளையும், சிறந்த உரைநடை நூல்களையும் கற்க வேண்டும். தமிழ் எங்கள் உயிர் என்ற உணர்ச்சி உள்ளத்தில் இருக்கவேண்டும். பல மொழிகளுக்குப் பிறப்பிடமாயும் இனறும் கன்னித்தன்மை குறையாது மிளிரும மொழி எங்கள் மொழி எனப் பெருமைப்பட வேண்டும். வளங் கொடுக்கும் தமிழ்ச் சொற்களை வழக்கத்தில் கொண்டுவர வெண்டும்.

தாய்மொழி வளர்ப்புக்குத் தமிழ் பேசும் மக்கள் ஆதரவு தருவார்களென்பது திண்ணம். இந் நல்லாதரவுடன் நம பண்பாட்டிற்கு அடிப்படையான தமிழ்மொழியை, மரபு பிறழாது பாதுகாக்கவும், போற்றவும், வளர்க்கவும் ஆவன செய்வோமாக.

"அரிய என்று ஆகாத
இல்லைபொச் சாவாக்
கருவியான் போற்றிச்
செயின்"

—திருக்குறள்.

வாழ்க தமிழ் மொழி!






மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

## கும்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வெளியீடு

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், க. வேந்தனார் அவர்கள் எழுதிய
விளக்கவுரையுடன் வெளிவந்துவிட்டது

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

**இத்துடன்,**

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனுல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.


## திருமணம்

மயிலிட்டி தெற்கு வைத்திய கலாநிதி வீ இராசநாயகம் அவர்களுக்கும் வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்களின் புத்திரி செல்வி மாலினிதேவிக்கும் சென்ற சனிக்கிழமை அரசாங்க அதிபர் அலுவலக வளவில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நயினுதீவு பிரம்மஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் அவர்கள் திருமணக் கிரியைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றினுர். சுற்றமித்திரர் பெருந்தொகையினர் சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதித்தனர். எல்லா நலன்களும் பெற்று மணமக்கள் இன்புற்று வாழ்வார்களாக என்று நாமும் அவர்களுடன் சேர்ந்து வாழ்த்துகின்ருேம்.

## உடுவில் மாதர் சங்கம்

உடுவில் கிழக்கு மாதர் சங்க ஆரம்பக் கூட்டம் ஆவணி மாதம் 5-ந் திகதி (20-8-55 திங்கட் கிழமை பிற்பகல் கற்பக விநாயகர் சனசமுக நிலையத்தாரால் கூட்டப்பெற்றது.

திருமதி மு. சுகிர்தரத்தினம் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது. பின்பு கிராமச்சங்க சுகாதார பரிசோதகர் அவர்களால் சங்கம் நடத்தும்முறை உபவிதிகள் என்பன விரிவாக விளக்கப்பட்டன. அதன்பின் தலைவராக திருமதி சி. சரஸ்வதியும் காரியதரிசியாக திருமதி மு. சுகிர்தரத்தினமும், தனுதிகாரியாக திருமதி க. பாக்கியலட்சியும் தெரிவு செய்யப்பெற்றனர்.

# மன இருள் நீக்கும் மந்திர ஒலி

பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவர ஐயர்

உலகத்தில் மனிதர் தோன்றிய காலம் இது என்று வரையறை செய்ய முடியாது. அதுபோலவே நமது சைவசமயமும் ஒரு எல்லையுள் அடங்காது. பல சமயங்கள் காலந்தோறும் தோன்றின. சமய ஆராய்ச்சி மொழி ஆராய்ச்சிகள் நன்றுதான். அவற்ருல் ஆன்ம இலாபம் பெறப்படாது. சமய ஒழுக்கம் ஒன்றே உயிர்க்கு உறுதுணையாகும். எண்ணில் கோடி உயிர்கள் உள்ளன. மக்கள் என்று கூறப்படுவோர் சிறந்த அறிவுடையர். தேசந்தோறும் வேறு வேறு விதமான அறிவுஞ் செயலும் மனிதரிடங் காணலாம் தமிழ் மக்கள் தோன்றியகாலம் முதல் நாகரிகம் கடவுட்பக்தியுடையவர்கள். சைவசமயமும் பழமை வாய்ந்தது. இதன் தலைவராகிய சிவபெருமானின் முழுமுதன்மையும் அருட்பெருக்கும் நம்மால் வரையறுக்க முடியாதவை. அப் பெருமானருளிய வேத சிவாகமங்களே இன்று வரையும் கைக்கொள்ளப்பட்டு வந்தன. சைவ சமயத்திற்குத் திருக்கோயில் வணக்கம் முதற் சாதனமாகும். அக் கோயில்கள் உல்லாச வாச மண்டபங்களன்று. ஆகம முறையான ஆலயங்கள் பல. மந்திர வியந்திரங்கள் ஆலயங்களிலுள்ளன.

மந்திரங்கள் மன இருள் தூரக்கும் பான்மையன. நினைப்பவரைக் காப்பதே மந்திரத்தின் மாட்சி தெரிக்கும். இது ஒரு உலகதந்திரப் பேச்சன்று. காயத்திரி மந்திரம், பஞ்சாட்சர மந்திரம், பிராசாத மந்திரம் முதலவாக மந்திரங்கள் பாகுபாடு செய்யப்படும்.

"நிறைமொழி மாந்தர்
ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே
மந்திரமென்ப"

இலக்கணமும் மந்திரம் என்று ஒன்றுளது என்று கூறும்.

திருவள்ளுவரும்,

"நிறைமொழிமாந்தர்
பெருமை நிலத்து
மறைமொழி காட்டி
விடும்"

என்ருர். இவை ஒருபுறமாக, பஞ்சாட்சரம் என்ருல் நன்ருயில்லை, ஆகையால் ஐந்தெழுத்து என்பர் ஒருசாரார். ஐந்து எழுத்தும் வடமொழி என்பதை மறந்தார்கள் போலும். நாவிற்கு நல்லணிகலம் நமச்சிவாய என்று அடியார் கூறுவர். சிவமந்திர மகிமையைச் சைவநூல்கள் வியந்துரைக்கும். திருமுறைகளிற் பஞ்சாட்சரங்கள் காணப்படும். முதலில் சிவமும் சத்தியும் இடையில் ஆன்மாவும், இறுதி இரு எழுத்துக்கள் திரோதான சத்தியும் ஆணவ மலமும் பொருளாகத் திகழ்கின்றன.

பிராஸாதமந்திரம் இறைவன் கோயில்போல் விளங்கும். அன்றிச் சிவஞானகதியாகிய மோட்சத்தை நல்கும் என்றும் உணர்தல் வேண்டும். அரிய பிராஸாத மந்திரமாண்பு ஆறு சுலோகங்களால் விளக்கப்பட்டன. அதன் பேருரை நீர்வேலிச் சங்கர பண்டிதரவர்களால் திறம்பட எழுதப்பட்டது. அதனை நாம் நன்கு தெளிந்து கோடற்பாலதாக, அச்சுவேலி ஆகம பண்டிதர் பிரம்மஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள் எழுத்தில் பதிப்பித்தருளினுர்கள். மந்திர மாட்சி கண்டு சைவாசாரசீலர்கள் பயனடைவது நன்மைத்தாகும். பைசாசங்களுக்கும் விடம் முதலியவற்றிற்கும் மந்திரம் கண்கூடான பயன்றருதலைக் கூறவாவேண்டும்? இவற்றைச்சிந்தித்து மன இருள் நீங்கி இன்பநெறிக்கு மந்திரம் வித்தாகும் என்றறிக.

சுபம்


### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில்
கைதடி நடராசா பாண்டியர்
— வழக்காளி
எதிர்
இல 1036 M
1 கைதடி சின்னத்தம்பி முருகேசுவும்
2 பெண் நாகமுத்துவும்
எதிரிகள்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில் 1036-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்பிரகாரம் பின் கூறப்படு மாதனங்கள் 1956-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அவ்வக் காணிகட்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ருபா 3674-08 சதமும் ருபா 3125 க்கும் 9-7-55தொடக்கம் 1-11-55வரைக்கும் 6 வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு 2-11-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ருபா 211-20.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தென்மராட்சிப் பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று நாவற்குழியிறை புதுக்கிராய் வயல் நெற்பரப்பு 35 எல்லை கிழக்கு அம்பலவாணர் பெண் செல்லமுத்துவுக்குரிய வாதனம். வடக்கு வாய்க்கால் மேற்கு முடிக்குரிய நிலம். தெற்கு விஞசித்தம்பி சங்கரப்பிள்ளைக்கும் சகோதரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் பதிவு F 210/276 யாழ்ப்பாணம் காணிப் பதிவு கந்தோர்.

2 ஷ நாவற்குழிக் கோவிற்பற்று கைதடியிறை இலுப்பையடிபுலமும் இலுப்பையடி தோட்டமும் நிலப்பரப்பு 25 3/4 எல்லை கிழக்கு பாலசிங்கம் கைம்பெண் பொன்னுவுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மூகப்பும் விசுவனுதர் சுப்பிரமணியத்துக்குமுரிய ஆதனம், மேற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் தெற்கு கார்த்திகேசு வேலுப்பிள்ளை பெண் சின்னம்மாவிற்குரிய வாதனம். இவ் வெல்லைக்குட் சேர்ந்தவைகளனைத்திலும் சொரியலாய் 5/8 பங்கு பதிவு F 174/82

3 நாவற்குளிக்கோவிற்பற்று மறவன்புலோ இறை அடைப்பற்று வயல் நெ பர 40 நாற்பதுக்கெல்லை கிழக்கு நாகலிங்கம் அண்ணுமலைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு தம்பு சுப்பிரமணியத்துக்குரிய வாதனம் மேற்கு இராசையா முத்துமணிக்குரியவாதனம்தெற்கு ஏரம்பு நடராசாவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம் இதிற் சொரியலாய் 1/2 அரைவாசி பதிவு F 143/180.

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்
சாவகச்சேரி
27- 8—56
M 331 24-8- (௲100)


# பிறநக்கு அடிமைகளாகோம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிறரிடம் அடிமையாகமாட்டோம், பிறரை அடிமைப்படுத்தவும்மாட்டோம், பயப்படமாட்டோம், மற்றவரைப் பயப்படுத்தவும் மாட்டோம் என்ற நிலை ஏற்படவேண்டும்.

நாம் ஆத்மாவின் பலத்தை, குணத்தை வெளிப்படுதத வேண்டும். ஆகையால் அரசியல் சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னுற் பல காரியங்களைச் செய்ய வேண்டும். பிறரிடமிருந்த நம் நிலம் நம் கைக்கு வந்த பின்னர்தானே அதிகமாக உழைக்க வேண்டும். நம்முடைய கைக்கு நிலம்கிடைத்துவிட்டதென்று ஏர் பிடித்து ஏற்றம் இறைக்காமலிருந்தால்எப்படி அறுவடை செய்யமுடியும்? அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டோமென்ருல் இப்பொழுது நமது நிலம் நம் கைக்குவந்துவிட்டதென்றுதான் பொருள். அரசியல் சுதந்திரம் அடைந்த பின்னர் ஆத்மீகக் கோயில் திறந்துவிடுகிறது. ஆகையால், பாரதமும் பாண்டிச்சேரியும் ஆத்மீக முன்னேற்றமடையவேண்டும். பாரத நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அதற்கு அகில உலகத்திற்கும் சேவை செய்யக்கூடிய பொறுப்பும் வாய்ப்பும் இருக்கிறது. இங்ஙனம் ஒவ்வொரு நாடும் விடுதலை பெற்றவுடன் தனித் தனிப் பொறுப்புக்கள் ஏற்பட்டுவிடுகின்றன. உலகில் எல்லோரும் சமம் என்ற நிலைமையை ஏற்படுத்தும் பொறுப்பு இந்தியாவைச் சேர்ந்ததாகும். எனவே பாரத மக்கள் மூன்று சித்திரங்களைக் கடைப் பிடிக்கவேண்டும்.

நம் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய மிகப் பெரிய காரியம் இருக்கிறது. எந்த நாட்டைப் பெரிய நாடு என்று சொல்லுகிறேமோ அந்த நாட்டில் ஒற்றுமை இருந்தாற்ருன் "பெரியது" என்று கூறுவதில் பெருமை இருக்கின்றது. ஒற்றுமை இல்லைஎன்ருல் பெரிது என்ற சொல் அந்நாட்டின் பெரிய பலவீனத்தையே காட்டும். வித்தியாசங்களும் வேறுபாடுகளும் இருந்தால் வித்தியாசங்களில் பெரிய நாடு என்றுதான் சொல்ல வேண்டும். நமது நாட்டை மகான்களும் மகரிஷிகளும் பெரிய நாடு என்று கூறியிருக்கிருர்கள். இப்பொழுது நமது உள்ளங்களையும்பெரிதாக்கிக்கொள்ள வேண்டும். நாடு பெரிதாக இருந்து உள்ளம் சிறிதாக இருக்கக்கூடாது. கட்சிவேறுபாடுகளை மறந்து, ஏழைகளுக்குச் சேவை செய்வதிலேயே ஈடுபட வேண்டும்.

இந்தியாவில் எத்தனையோ இராச்சியங்கள் இருந்தன. இருந்த இடம் தெரியாமல் ஒற்றுமையின்றி அழிந்தன. அதைகளிலிருந்து நாம் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். உருவத்தோடு நிழல் வருவதைப்போல இந்தியாவில் நல்ல குணங்களோடு தோஷமும் இருக்கிறது. இந்தியாவில் எத்தனையோ தத்துவ ஞானிகள் இருந்தார்கள், இருக்கிருர்கள். அவர்களுக்குள் ஒற்றுமை இருப்பதில்லை.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# முப்பாலின் சிறப்பு

1-ம் பக்கத்தொடர்ச்சி

இங்கிலையில் "கபிலர்" என்ற பெரும்புலவர் எழுந்தார், புலவர்குழாம் வியப்புடன் கபிலரை நோக்கிற்று. மன்னன் பாண்டியன்கூட கபிலரை வேட்கையுடன் நோக்கினன். கபிலர் மன்னனை நோக்கினர். மற்றைய புலவர்களெல்லாம் கபிலரை நோக்கினர்கள். கபிலர் எப்பொருள் கொண்டுரைக்கப் போகின்றார் என்ற ஒரே கேள்வி எல்லோர் உள்ளத்திலும் ஊசலாடியது.

கபிலர் பாண்டியனைவிளித்து "எமது நாட்டுச் சிறு குடிசைகள் தோறும் சிறு மனைகள்தோறும் பெண்கள் தினை அரிசியை உரலிலிட்டுத் தீட்டுவார்கள். அப்பொழுது அவர்கட்கு எழும் இளைப்புகளை நீக்கும் பொருட்டு அவர்கள் உலக்கைப் பாட்டைப் பாடிக்கொண்டு தினையைத் தீட்டுவார்கள். அவர்களது அழகிய மனையில் உள்ள சிறு பேடுகளானது உரலிலிருந்து வெளிக்கிளம்பும் தினையரிசியைத் தின்னவரும். வந்த பேடுகள் உலக்கைப் பாட்டில் உறங்கிவிடுகின்ற வளப்பமுடைய நாட்டையுடைய வனே என விளித்தார் கபிலர். புலவர்கள் எல்லாரும் திகைப்புடன் கபிலரை நோக்கினர்கள். மன்னன் தன் நாட்டு வளத்தைக் கேட்டு மகிழ்ந்து நிற்கின்றார்; கபிலர் தொடர்ந்து பேசுகின்றார்; "இத்துணை வளமுடைய மன்னனே! தினை அரிசியின் அளவுக்கு ஒப்பாய மிகச் சிறிய புல்லினது மேல்நுனியின் கண் உள்ள பனி நீர் நீண்டு நெடிதுயர்ந்த பனையின் அளவானதும் அதன் சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம்போல் தன்மைத்தாயது" என்ற அளவிலே பாண்டியனும் புலவர்களும் எது என்ற ஐயத்தில் ஆழ்ந்து அயர்ந்தனர். அஃதுதான் எமது அவைக் களத்தில் அமைந்திருக்கும் பெரும் புலவர் திருவள்ளுவர் அருளிய முப்பால் என்று முடித்தார்; மன்னனது அவைக் களம் மகிழ்ச்சியுள் ஆழ்ந்தது.

"தினையளவு போதாச்
சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும்
படித்தால் —மனையளகு
வள்ளைக் குறங்கும்
வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி"
— கபிலர்

குரும்பசிட்டி

# சன்மார்க்கசபை

## குகானந்தவாரியாரின் பெரியபுராணப் பேருரை

மக்களிடத்தே அஞ் என்னும் விரிவுரையில்கூறி ஞான இருள் நீங்கி மெஞ் ஞர். ஞான ஒளி விளங்கி முத்தி பெறச் சாதனமாகவும், உலகியல் வாழ்வுக்குப் பெரும் துணை நூலாகவும் அமைந்தது பெரிய புராணம். சைவ சமயிகளாகிய நாம் தினமும் பெரியபுராணத்தை அரும் பெரும் ஞானநூலாகப் பயின்று பயன் அடையவேண்டியது கடமையாகும். கடவுளின் தத்துவங்களையும் அவர் சிறப்பியல்புகளையும் தெரிய வைப்பதும் பெரிய புராணத்தின் தனிப் பெரும் சிறப்பாகும். கருணைக் கடலாகிய சிவபிரான், அவரது பக்தர்களுக்கு வேண்டியன வேண்டியவாறு ஈந்து முத்தி பெறச் செய்யும் வழிவகைகளை எடுத்துக் கூறும் வழி நூலாகவும் அமைந்துள்ளது. இத்தகைய பெரிய புராணம் மக்கள் மனத்தில் இடம்பெற வேண்டியது இக்காலப் போக்குக்கும் மிகவும் இன்றியமையாததாகும். இவ்வாறு இப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு வந்து இராமேசுவர தேவஸ்தான முன்னாட் சமயப் பிரசாரகர் உயர்திரு குகஸ்ரீ குகானந்தவாரி அவர்கள் 11-8-56 சனிக்கிழமை குரும்பசிட்டி சன்மார்க்கசபையிற் "சேக்கிளாரும் பெரியபுராணமும்"

பெரியபுராணத்தை மெய்யன்புடன் பாராயணம் செய்து அதன் அனுபவத்தைவாழ்க்கையிற் கடைப்பிடிப்போமாயின் பிறவிப் பயன் கிட்டும். பெரியபுராணம் போன்ற தெய்வ நூல்களிற் பயிற்சியின்மையே மக்களிடையே நாஸ்திகமும் தெய்வ நிந்தனையும் பரவுவதற்குக் காரணமாகும். இக்காலத்துச் சீர்கெட்ட கதைகளும் நவீன நாவல்களும் மக்கள் மனத்தைக் கெடுத்துவிட்டன. நேர்மை, நீதி, இரக்கம், அகிம்சை, தெய்வபக்தி இக்காலத்திலே மக்கள மனத்தில் வளர்ச்சியடையவில்லை. இது வருந்தக்கூடிய நிலைமையாகும்.

சேக்கிளார் சுவாமிகள் பக்திச்சுவை, பொருட்சுவை சொற்சுவை மிளிர பெரிய புராணம் என்று சொல்லும் நூலை சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த "திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியடிகள் பாடிய "திருவந்தாதியும்" கொண்டு இறைவன் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க, உலகம் உய்யும்படி பாடியருளினார். இந் நூல் மக்கள் மனத்தைப் பண்படச் செய்து நல்வாழ்வுக்கு நெறிவகுத்து இறைவன் திருவடி சேர வழிநூலாக அமைந்துள்ளதாதலின் இதனை மக்கள் பக்தி சிரத்தையுடன் படித்துப் பயன்பெறவேண்டுமென மேலும் பேசும் போது அவர் வேண்டிக் கொண்டார்.

# பிறருக்கு அடிமைகளாகோம்

——0-0——

[5 ம் பக்கத் தொடர்ச்சி]

சிறிய சிறிய செயல்களுக்கெல்லாம் வாதம் செய்கிறார்கள். சாதாரண மனிதர்கள் மட்டுமல்ல, சங்கரரும் இராமானுஜரும்கூட வாதம் செய்திருக்கிறார்கள். பாரத நாட்டில் அபாரமான ஆத்மீக புத்தி இருக்கிறது. ஆனால் எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது இப்படிப்பட்ட பணிகளுக்கு மத பேதம் வேண்டாம், அபிப்பிராய பேதம் வேண்டாம். இந்தப் பணிகளை எல்லாம் செய்துவிட்டு பின்னர் வேண்டுமானால் கொள்கைகளைப் பற்றிப் பேசுவோம்.

இரண்டாவதாக நமது நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். எந்த தேசமும் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வு இருக்கும் வரை முன்னேற முடியாது இந்த ஏற்றத் தாழ்வுகளை எல்லாம் ஒழித்தாற்றான் அந்த நாடு ஒருபெரிய நாடாக இருக்க முடியும். எனவே தான் இறைவனின் இச்சைப்படி பூமிதான இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறேன். இது பாரதத்தில் ஐந்தாண்டு காலமாக இயங்கி நாட்டு மக்களிடம் நல்லெண்ணத்தை ஏற்படுத்தி அபிப்பிராய பேதங்களை எல்லாம் நீக்கியிருக்கியிருக்கிறது. நிலத்தின் மீது உடைமை கொண்டாடக்கூடாதென்பது இறைவனின் சித்தாந்தமாகும் ஆகையால் நிலமில்லாத மக்களுக்கு நிலம் தருவது நம்முடைய கடமையும் இன்றைய தேவையுமாகும்.

மூன்றுவதாக பயமின்மை வளர வேண்டும். குழந்தைகளைத்தாய்மார்கள் அடித்தால் அடிக்கும் வரை கேட்கமாட்டோம் என்று குழந்தைகள் கூறவேண்டும். குற்றங்களுக்கு இருப்பிடமோ பயம்தான். தாய் "அதோ சந்திரன்" என்று குழந்தைக்குக்காட்டும்பொழுது தாயின் சொல்லை குழந்தை அப்படியே நம்புகிறது. இவ்வளவு நம்பிக்கையுள்ள குழந்தையை அடிப்பதால் நல்ல குணங்கள் ஏற்படாது. அடிப்பதனால் ஒரு கட்டுப்பாடு வந்துவிட்டது என்றாலும் அதிலிருந்து பயத்தைக் கற்றுக் கொடுத்துவிடுகிறோம். குழந்தைக்கு ஒழுக்கத்தோடு பயத்தைக் கற்றுக் கொடுக்கக்கூடாது. கல்லூரி விடுதிகளில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தோடு பயத்தைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதனால் மாணவர்கள் வீட்டிற்கு வந்த பின்னர் முற்றிலும் மாறாக நடந்து கொள்கிறார்கள். அரவிந்தர் ஆசிரமத்தில் மாணவர்கள் தாங்களாகவே வந்தால்தான் கற்றுக் கொடுக்கிறார்கள். அவர்களை யாரும் கட்டாயப்படுத்தியோ, பலவந்தப்படுத்தியோ பள்ளிக்கு அனுப்புவது கிடையாது. ஆசிரியர்கள் நடந்துகொள்கின்ற முறையையும் கற்றுக் கொடுக்கின்ற முறையையும் பொறுத்து மாணவர்கள் வகுப்பிற்கு வருவார்கள் எந்த ஆசிரியரின் வகுப்பிற்கு மாணவர்கள் வரவில்லையோ அந்த ஆசிரியர் தான் தேறவில்லை, பிழைபோய் விட்டார் என்று சொல்லவேண்டும் இந்தமுறைதான் ஞானத்தைப் போதிக்கும் வழியாகும். பயத்தால் ஞானத்தைப் போதிக்க முடியாது. பலர் மக்களைப் பயமுறுத்தி அரசாங்க காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள். அவர்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன். ஒரு இராக்கதன் ஒரு மனிதனைப்பிடித்து வைத்துக்கொண்டு தனக்குக் கீழ்படிந்து வேலை செய்யாவிட்டால் அவனைத் தின்றுவிடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டே வந்தான் அந்த மனிதன் ஒரு நாள் இவ்வளவு துன்பப்படுவதிலும் இறந்துவிட்டாலும் நன்று என்று நினைத்து ஒரு நாள் "வேண்டுமானால் தின்றுவிடு" என்று தைரியமாகக் கூற முன் வந்துவிட்டான். இப்பொழுது அந்த இராட்சசன் திகைத்துப் போனான். அவனைச் சாப்பிட்டுவிட்டால் பின்னர் அவனுக்கு வேலை செய்வது யார்......? என்று வினவித் தம் கருத்துக்களை விளக்கினர்.

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையாரால் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, காசிவிநாயகராலய மண்டபத்தில் சபைத்தலைவர் பிரமஸ்ரீ மு சிவகடாக்ஷக் குருக்கள் தலைமையில் ஆடி மீ 28 உ (12-8-56) ஞாயிற்றுக்கிழமை மாலை கொண்டாடப்பட்டது.

அன்று மாலை ஸ்ரீ காசி விநாயகப் பெருமானுக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவுருப்படத்திற்கும் விசேட பூசைகள் நடைபெற்றன விசேட கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றபின் கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் சேக்கிழார் நாயனாரின் தீவிர பக்தியையும், நாயனாருக்குச் சுவாமியே தூதுவனாய் வந்த சிறப்பையும் எடுத்து விளக்கினார் செல்வன் பூ சிவானந்தராசா நாயனாரின் சரித்திரத்தைச் சுருக்கிக் கூறினார். இன்னும் பல மாணவர்கள் பக்திப் பாடல்கள் பாடினர்.

## சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரியார் சிவபாதசுந்தரம் அவர்கள்தான்.

ஒரு நாடு முன்னேறுதற்கு சைவ ஒழுக்கமுள்ள சிறந்த ஆசிரியர்களுள்ள வித்தியாசாலைகளும், சைவ வாழ்க்கையுள்ள வீடும், சிறந்த முறையில் நடைபெறும் கோவில்களும் இன்றியமையாதன. இவ் வழிகளில் நம்நாடு செல்லுமானல் சைவப் பெரியார் அவர்களுக்கு ஆன்மா சாந்தியுண்டாகும். இப்பெரியாரின் ஞாபக சின்னமாக பின்வருபவற்றில் ஒன்றையாயினும் சைவப்பெரு மக்கள் செய்யவேண்டும்.

1. பிராமணர்களுக்கென ஒரு பிராமணப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டும். அதில் வேதம், ஆகமம், சமஸ்கிருதம் முதலியன பயிற்றப்படுதல் வேண்டும். அதில் கல்வி பயிலும் பிராமணர்களே கோயிற் பூசகர்களாக அமர வேண்டும். இப்பாடசாலைக்கு 'சிவபாத சுந்தரம் பிராமண பாடசாலை' என்று நாமமிட வேண்டும்.

திருமுறைகளே சைவர்களின் உயிர். இவற்றை ஒருசிலராவது சுவைத்து வாழ்ந்துகாட்டினல் பெரும் பலன் கிட்டும். ஆகையால் சிவபாதசுந்தரம் தேவார பாடசாலை அல்லது திருமுறைப் பாடசாலை ஒன்று யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்க வேண்டும். இதில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரும், மற்றும் சைவ அபிமானிகளும் ஈடுபட்டு உழைப்பார்களாக என்று கூறினர்.

## இலங்கை மாணவரைப் பாதிக்கின்றது பிணக்கு

—0—

பிரித்தானியாவுக்குச் செல்லவிருக்கும் பலரை சுவெசுக் கால்வாய்ப் பிணக்குப் பாதிக்கின்றது கப்பல்கள் வழிமாறிப்போகின்றமையால் அவற்றில் இடம்பெறமுடியவில்லை. தொண்ணூற்றிரண்டு இலங்கை மாணவர் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்றனராம்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 24 8-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.